செய்தி வெளியீடு எண்:471 நாள் : 01.10.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29.9.2015 அன்று தலைமைச் செயலகத்தில், கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள், பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில்புரிவோர்களுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா பெட்ரோல் ஸ்கூட்டர்களை 969 நபர்களுக்கு வழங்கும் அடையாளமாக, 5 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களுக்கான சாவிகளை வழங்கினார்கள்.

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மூலம் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள், பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில்புரிவோர், வீட்டிலிருந்து எளிதில் கல்வி நிலையங்களுக்கும், பணிபுரியும் இடங்களுக்கும் சென்று வர அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த பேட்டரியால் இயங்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட மூன்று சக்கர மோட்டார் வாகனங்களுக்கு மாற்றாக பெட்ரோலில் இயங்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா ஸ்கூட்டர்கள் வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். அதன்படி, 2011–2012ஆம் நிதியாண்டில் 2 கோடி ரூபாய் செலவிலான இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட 400 பெட்ரோல் ஸ்கூட்டர்களை 5.9.2012 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கினார்கள்.

மேலும், 2012–2013ஆம் நிதியாண்டில் 2 கோடி ரூபாய் செலவிலான இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட 370 பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 2013–2014ஆம் நிதியாண்டில் 5 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலான இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட 985 பெட்ரோல் ஸ்கூட்டர்களும் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, 2014–2015ஆம் நிதியாண்டில் 5 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவிலான இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட 969 பெட்ரோல்

ஸ்கூட்டர்களை கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள், பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில்புரிவோர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக, 5 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் சாவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29.9.2015 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை பெற்றுக் கொண்ட கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் திருமதி பா. வளர்மதி, தலைமைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), மாற்றுத் திறனாளிகள் நலத் துறை முதன்மைச் செயலாளர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 1.10.2015